

மதுரையில் நேற்று, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலை யில், திருப்பரங்குன்றம் தொகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. நிர்வாகிகள் பத்துக்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அவ்வாறு கழகத்தில் இணைந்தவர்க ளில், அ.தி.மு.க. திருப்பரங்குன்றம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வழக்கறிஞர் M.ரமேஷ், திருப்பரங்குன்றம் நிலையூர் ஒன்றியச் செயலாளர் நிலையூர் முருகன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவுச் செயலாளர் வழக்கறிஞர் R. சேதுராமன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் வழக்கறிஞர் M. ஜெய பிரசன்னா, திருப்பரங்குன்றம் விவசாயப் பிரிவுச் செயலாளர் P.பாண்டி, மாவட்ட இலக்கிய அணிச் செயலாளர் கவிஞர் P.மோகன்தாஸ் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர். மாவட்டச் செயலாளர்கள் பி.மூர்த்தி, சேடப்பட்டி மு. மணிமாறன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

பிறந்தநாளில்

பசும்பொன் திருமகனாரின் தியாகத்தை நினைவுகூர்வோம்!

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி, வலைதளப்பதிவு!

சென்னை, அக்.31- பசும்பொன் திருமகனார் அவர்களின் பிறந்தநாளான நேற்று, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் விடுத்த வலைதளப்பதிவில், "பசும் பொன்திருமகனாரின் பிறந்தநாளில், அவரது தியாகத்தை நினைவு கூர்வோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது வலைதளப்பதிவு வருமாறு:-

நேதாஜியுடன் இணைந்து ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராகக் களம் கண்ட விடுதலைப் போராட்ட வீரர் பசும் பொன் திருமகனாரின் பிறந்தநாளில், அவரது தியாகத்தை நினைவுகூர் வோம்.



காலனிய ஆட்சியால் உரிமைகள் பறிக்கப்பட்ட சமூகங்களின் விடுதலைக்காகவும் முன்னேற்றத்திற் காகவும் அவர் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றுவோம்!

இவ்வாறு அப்பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

த.வெ.க. அரசைக் கண்டித்து

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

தலைமை : உதயா கருணாகரன்! வரவேற்புரை : ச.சசிகலா! கண்டன உரை : சேலம் சுஜாதா – தா.மோ.அன்பரசன்!

காஞ்சிபுரம், அக்.31- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில் தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று காலை மேற்கு தாம்பரம், சண்முகம் சாலையில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன் தலைமையில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சசிகலா வரவேற்புரையிலும் நடைபெறுகிறது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் முடித்து வைத்து, கண்டன உரையாற்றுகின்றனர்.

த.வெ.க. ஆட்சியில் விலைவாசி உயர்வு, போதைப்பொருள் விற்பனை, கொலை, கொள்ளை, பெண்களுக்கு எதிரான வன்முறை, குழந்தைகள் கடத்தல் என பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி சார்பில்,

இன்று (31.10.26) காலை 9.00 மணியளவில் தாம்பரம் சண்முகம் சாலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன் தலைமையிலும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ச.சசிகலா வரவேற்புரையிலும்,

மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் கே.சி.சந்தியா, கலைவாணி, மீரா, வளர்மதி, விஜயலட்சுமி, பாண்டிச் செல்வி, மலர்விழி, சத்தியா, சரளா, தமிழரசி,

மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் கல்யாணி ராமகிருஷ்ணன், நளினி, செண்பகவல்லி, சந்தியா செந்தில், விஜயலட்சுமி, சாந்தி, கலாவதி, தனலட்சுமி, வெற்றி செல்வி, தாம்பரம் மாநகர மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் -கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கண்டன உரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் இ.கருணா நிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி, மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ். ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மகளிர் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், மாநகர ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வார்டு - கிளைக் கழக மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் தாம்பரம் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம் நன்றியுரை ஆற்றுகிறார்.

தியாகராயர் நகர் மேற்குப் பகுதி 132(அ) வட்டப் பகுதிப் பிரதிநிதி

பெஸ்ட் எல். ரவிச்சந்திரன் இல்லத் திருமண விழா!

மயிலை த.வேலு – தமிழ்ச்சி தங்கபாண்டியன் – கே.ஏழுமலை – கோ.சு.மணி வாழ்த்து!



சென்னை, அக்.31- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி 132 "அ" வட்ட பகுதிபிரதிநிதி பெஸ்ட் எல். ரவிச்சந்திரன் இல்ல திருமண வரவேற்பு மற்றும் திருமண விழா நிகழ்ச்சி தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராயர் நகர் மேற்குப் பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., கிழக்குப் பகுதி செயலாளர் கோ.சு.மணி, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், ராஜா அன்பழகன், வட்டக் கழக செயலாளர் கே.எஸ். வெல்டிங் ராஜா, திருமதி பா.கார்த்திகா பாஸ்கர் எம்.சி. ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

தியாகராயநகர் மேற்கு பகுதி 132 "அ" வட்ட பகுதிபிரதிநிதி பெஸ்ட் எல்.ரவிச்சந்திரன் இல்லத் வரவேற்பு நிகழ்ச்சி இன்று (31.10.2026 சனிக்கிழமை) மாலை.6.30 மணியளவிலும், திருமண விழா நாளை (01.11.2026 ஞாயிற்றுக் கிழமை) காலை 9.00 மணிக்கு மேல், 10.30 மணிக்குள்ளாக பசும்பொன் தேவர் திருமண மண்டபம், அபிபுல்லா சாலை, தியாகராயர் நகர், சென்னை-17-ல் நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறுபான்மை அணி, பொறியாளர் அணி, தொழிலாளர் அணி, தகவல் தொழில் நுட்பஅணி, பாக முகவர்களின்அணி, அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தொ.மு.சா. தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.



சென்னை மேற்கு, சென்னை தெற்கு,
சென்னை தென்மேற்கு மாவட்டங்கள் சார்பில்
மாவட்ட மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில்

பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை (ம)
விலைவாசி உயர்வைக் கண்டித்து

மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

நாள் : 31.10.2026 காலை 9.00 மணி - இடம் : சிவானந்தம் சாலை, சென்னை.



த.வெ.க. அரசைக் கண்டித்து
கண்டனப் பேருரையாற்றுகிறார்கள்

திருமதி. விஜயா தாயன்பன்
டாக்டர் கனிமொழி சோமு
திருமதி. ராணி ரவிச்சந்திரன்
திருமதி. ரத்னா
டாக்டர் யாழினி



ARASU ARTS



சென்னை மேற்கு, தெற்கு, தென்மேற்கு
மாவட்ட மகளிரணி, மகளிர் தொண்டரணி

